**OS 36/2020, Dt 01.11.2022, சாட்சி வாசா2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது**

இந்த வழக்கு பற்றிய விவரங்களை எனக்கு வாதிதான் சொன்னார். எனக்கும் வாதிக்கும் சுமார் 15 வருடங்களாக பழக்கம். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி சொன்ன விவரத்தை அடித்தார்களா என்றால் ஆமாம். நான் வாதி மற்றும் பிரதிவாதி ஜெயக்குமார் மற்றும் மற்றொரு சாட்சி நேதாஜி ஆகியோர்கள் அனைவரும் தஞ்சாவூரில்தான் வசிக்கிறோம். என்னை சாட்சியாக கையொப்பம் இட வாதி 17.12.2017 அன்று நாகப்பட்டினத்திற்கு வருமாறு சொன்னார். நானும் வாதியும் மற்றொரு சாட்சி நேதாஜியும் மாலை 4.00 மணியளவில் நாகப்பட்டினத்திற்கு சென்றோம். அன்று பிரதிவாதியின் தாயார் அங்கு இருந்ததால் நாங்கள் அங்கு சென்றோம். பிரதிவாதியின் தாயாரிடம் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை. பிரதிவாதியின் தாயார் முன்பு வைத்து பணம் கொடுக்கவில்லை. பிரதிவாதி ஏற்கனவே பணம் வாங்கிவிட்டார். நாகப்பட்டிணத்தில் வைத்து எழுதிக்கொடுத்தார். முத்திரைத்தாள் நாகப்பட்டிணத்தில் வைத்துதான் வாங்கப்பட்டது. ஏற்கனவே வாதி எந்தெந்த தேதிகளில் பணம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிகளில் வாதியும் பிரதிவாதியும் என்ன பேசிக்கொண்டார்கள் என்று நேரடியாக எனக்கு தெரியாது. பணம் கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் வாதி சொல்லிதான் எனக்கு தெரியும். எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் வாசாஆ 1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். வாசாஆ 1 ஆவணத்தை தவிர பிரதிவாதி வேறு ஆவணம் எதுவும் தரவில்லை. வாசாஆ 1 ஆவணத்தில் ஆவணத்தேதியில் ரூ. 62 இலட்சம் பெற்றுக்கொண்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எத்தனை சதவீத வட்டி வாசாஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்னபடி எந்த பணப்பரிமாற்றமும் நடக்கவில்லை என்றும் பிரதிவாதி ஆவணம் எதுவும் என் முன்னிலையில் எழுதித்தரவில்லை என்றும் வாதி என் நெருங்கிய நண்பர் என்பதால் வாசாஆ 1ல் பின் தேதியிட்டு கையொப்பம் இட்டு

தற்போது அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1ல் நாகப்பட்டிணத்தில் வைத்து எழுதியாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) A. மலர்விழி,

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.